تاميلي

தமிழ்

أحكام يوم العيد

# பெருநாள், மற்றும் தொழுகை தொடர்பான சட்டங்கள்

ஆசிரியர்:

கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்

முன்னால் மதீனா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர் ,

மஃஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.

www.alsarhaan.com WWW.MAHADSUNNAH.COM

# பெருநாள், மற்றும் தொழுகை தொடர்பான சட்டங்கள்

**கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்**

முன்னால் மதினா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர்,
மஃஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.

இஸ்லாமிய ஷரீஆவின் முக்கிய இலக்குகளில் ஒன்றுதான் உள்ளங்கள் ஒற்றுமைப் பட்டு, சகோதரத்துவமும், பரஸ்பர அன்பும் முஸ்லிம்களுக்கிடையில் தழைத்தோங்குவதாகும்.

இதனால்தான் அதிகமான வணக்க வழிபாடுகளை கூட்டாக நிறைவேற்றுமாறு மார்க்கம் பணிக்கிறது. அவற்றில் பெருநாள் தொழுகையும் ஒன்று.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன் தோழர்கள் அனைவரையும் பெருநாள் தொழுகைக்காக ஒன்று சேருமாறு கட்டளையிடுவார்கள். மாத்திரமன்றி தீட்டுள்ள பெண்கள் உட்பட அனைவரையும் அன்றைய நன்மையில் கலந்து கொள்ளுமாறும், முஸ்லிம்களின் பிரார்த்தனையில் பங்கெடுக்குமாறும் வலியுறுத்தியுள்ளார்கள்.

குளித்து, அழகு படுத்தி, நல்ல தோற்றத்தில் இம்மாபெரும் ஒன்று கூடலுக்கு தயாராகுவது மார்க்கத்தில் விரும்பத்தக்க ஒன்று. ஈதுல் பித்ர் நோன்பு பெருநாள் அன்று தொழச் செல்வதற்கு முன் சில பேரீத்தம் பழங்களை சாப்பிடுவதுவது விரும்பத்தக்கது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் சில ஈத்தம் பழங்களை உண்டதன் பின்னரே தொழுகைக்கு செல்வார்கள்.

தொழுகையின் நேரம் சூரியன் உதயமாகி ஒரு ஈட்டி அளவு உயர்ந்ததிலிருந்து சூரியன் உச்சியில் இருந்து சாயும் வரை நீடிக்கும்.

இத்தொழுகையை பள்ளிவாசலில் அல்லாது தொழும் திடலில், அல்லது திறந்த மைதானத்தில் நிறைவேற்றுவது விரும்பத்தக்கது.

தொழும் திடல் இல்லாவிட்டால் அல்லது அதற்கு செல்ல முடியாது போனால் பள்ளிவாசலில்

நிறைவேற்றலாம்.

இத்தொழுகைக்கு அதானோ, இகாமத்தோ அவசியமில்லை. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஈதுல் ஃபித்ர், ஈதுல் அல்ஹா தினங்களில் தொழும் திடலுக்கு செல்வார்கள். அங்கு சென்று முதன் முதலில் தொழுகையை ஆரம்பித்து இரண்டு ரகஅத்துக்களாக தொழுவார்கள்.

முதல் ரகஅத்தில் ஆரம்ப தக்பீரை அடுத்து 6 தக்பீர்கள் சொல்வார்கள், இரண்டாம் ரகஅத்தில் எழுந்து வரும் தக்பீரை அடுத்து 5 தக்பீர்கள் சொல்வார்கள்.

ஒவ்வொரு தக்பீருடனும் கைகளை உயர்த்துவதுடன், தக்பீர்களுக்கு இடையில் அல்லாஹ்வை பெருமைப்படுத்தி, புகழ்ந்து தஸ்பீஹ் செய்துகொள்வது நன்று.

இரண்டு ரகஅத்துகளிலும் சூராஃ அல் அஃலா, அல்

காஷியா அல்லது சூராஃ காஃப், அல் கமர் ஆகிய அத்தியாயங்களை ஓதுவது சுன்னத் ஆகும்.

பின்னர் இமாம் ஜும்ஆ போன்று இரு குத்பாக்களை நிகழ்த்துவார்கள். மஃமூம்கள் குத்பாவில் கலந்து கொள்வது விரும்பத்தக்கது. தொழும் திடலுக்கு நடந்து நேர காலத்துடன் செல்வது விரும்பத்தக்கது, மேலும் செல்லும் வழியை மாற்றி வேறு வழியால் வீடு திரும்புவது சுன்னத் ஆகும்.

பெருநாள் தொழுகை தவறினால் அதன் முறையைப் பேணி கழாஃ செய்வது சுன்னத் ஆகும்.

பெருநாள் மகிழ்ச்சி அல்லாஹ்வுக்கு வழிபட்டு அவன் ஏவியவற்றை நிறைவேற்றுவதன் மூலமே பூரணமடையும்.